மரக்கன்றுகள் நடுவோம்! மரம் வளர்ப்போம்!! மழைபெறுவோம்!!!

# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்
# MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

767, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபிஸ் எதிரில், K.புதூர், மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


தேதி :

பெறுநர்

**உயர்திரு போக்குவரத்து ஆணையர் அவர்கள்,**
போக்குவரத்துரை,
சேப்பாக்கம், சென்னை - 60005.

ஐயா,

பொருள்: வாகன புகைச் சான்றிதழ் கட்டணத்தை உயர்த்துதல் சம்மந்தமா

எங்களது சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர் செயலாளர், பொருளாளர் கடந்த 05.09.2018ம் தேதி தங்களை சந்தித்தோம். அப்பொழுது தாங்கள் எங்களது புகைச் சான்றிதழ் கட்டணத்தை கட்டாயம் உயர்த்தி தருவதற்கு ஆவண செய்கின்றேன் என்று எங்களிடம் கூறினார்கள்.

கடந்த ஒன்பது வருட காலமாக அனைத்து ஆணையர்களும் தாங்கள் கூறிய பதிலையே சொல்லிவந்தனர்.

ஆனால் இதுவரை எங்களுக்கு எந்த ஒரு ஆணையரும் எங்களது கோரிக்கையை நிறைவேற்றி கொடுக்கவில்லை.

ஆகவே, தாங்களாவது எங்களது சான்றிதழ கட்டணத்தை உயர்த்தி தருவதற்கு ஆவண செய்வீர்கள் என்று நம்புகின்றோம்.

தற்போழுது வாகனங்கள் (Non Transport) சான்றிதழ் பெறுவதற்கு வருவதே இல்லை. இதைப் பற்றியும் தாங்களிடம் 05.09.2018ம் தேதி பேசினோம் அதற்கும் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக கூறினீர்கள்.

தாங்கள் வாகனங்கள் புகைச் சான்றிதழ் பெறுவதற்கும், கட்டணத்தை உயர்த்தியும் ஆவண செய்து எங்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திதருவீர்கள் என்று தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்

தேதி: 27.02.2019
இடம்: சென்னை